வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 | 23.04.2026 வியாழக்கிழமை | இதழ் : 107 | பக்கங்கள் : 08





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# தெற்கில் தமிழர் விரோத அரசு வேண்டுமென வடக்கில் தோல்வியடைந்த கட்சிகள் விருப்பம்!

## யாழில் கூறினார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



யாழ்ப்பாணம், ஏப். 23

தெற்கில் தமிழர் விரோத அரசொன்று இருக்க வேண்டும் என்பதையே வடக்கில் தோல்வி அடைந்துள்ள கட்சிகள் விரும்புகின்றன. நாம் அவ்வாறு செயல்படமாட்டோம். எம்மிடம் இனவாதம் கிடையாது. தேசிய மக்கள் சக்தியென்பது இலங்கை மக்களுக்கான கட்சியாகும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, 984.73 மில்லியன் ரூபா மதிப்பில் குறிகாட்டுவான் இறங்குதுறைப் புனரமைப்பின் இரண்டாவது கட்டப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் அரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், 2027 ஒக்ரோபர் 26ஆம் திகதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, குறிகாட்டுவான் இறங்குதுறையை இணைக்கும் வீதி பணிகளும் நிறைவு பெறும் நிலையில் உள்ளன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர்

07

# யாழில் அமைச்சரின் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 23

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் செய்தி சேகரிக்கமுடியாது என தெரிவித்து ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு அரச நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இதனொரு அங்கமாக யாழ்ப்பாண நகர திட்டம் பற்றிய கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், யாழ்ப்பாண மாநகர முதல்வர், துறை சார்ந்த அதிகாரிகள் பலரின் பங்கேற்புடன் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது செய்தி சேகரிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரால் ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி செய்தி சேகரிக்க சென்ற

07

# வீதி அபிவிருத்தி அதிகார சபை வடிவமைப்பு அலுவலகம் யாழில்!

யாழ்ப்பாணம், ஏப். 23

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண வடிவமைப்பு அலுவலகம் நேற்று யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால், அலுவலகத்திற்கான பெயர்ப் பலகை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண அலுவலகத்தில், குறித்த வடிவமைப்பு அலுவலகம், தனி அலகாக திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், பணியாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான

07

# தமிழகத் தேர்தல் இன்று!

சென்னை, ஏப். 23

தமிழகத்தின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சட்டசபை தேர்தல் இன்று காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது.

தி.மு.க, அ.தி.மு.க., த.வெ.க. மற்றும் நாம் தமிழர் கட்சி என நான்கு முனைப் போட்டி நிலவும் இந்தத் தேர்தலில், சுமார் 5.73 கோடி வாக்காளர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றவுள்ளனர்.

கடும் கோடை வெப்பத்தையும் பொருட்படுத்தாது கடந்த சில வாரங்களாகத் தமிழகம் முழுவதும் அனல் பறக்கும் பிரசாரம் நடைபெற்றது.

அதன்படி, மு.க. ஸ்டாலின் (தி.மு.க, திருவாரூரில் தொடங்கி, தான் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

07

# உரும்பிராய் விபத்தில் தந்தையும் மகனும் பலி!

## நள்ளிரவுவேளை துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 23

நள்ளிரவுவேளை உறவினரை வைத்தியசாலையில் பார்த்துவிட்டு வந்த தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியான துயரச் சம்பவம் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது. ,

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் உறவினர் ஒருவர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரை பார்வையிடுவதற்கு தந்தையும் மகனும் சென்றுள்ளனர்.

பின்னர் அவர்கள் இருவரும் நள்ளிரவுவேளை திருநெல்வேலியில் இருந்து பலாலி பக்கமாக

07

# பிரேமலால் ஜயசேகரவுக்கு பிணை!

கொழும்பு, ஏப். 23

நுவரெலியாவில் நபர் ஒருவரைத் துப்பாக்கியால் மிரட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இரத்தினபுரி மாவட்ட

07

# யாழ்ப்பாணம், வவுனியா நகரங்களை இவ்வருடம் அபிவிருத்தி செய்ய திட்டம்

## அமைச்சர் பிமல் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கையில் 10 நகரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத் திட்டத்துக்கு அமைய - வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா

07



# பௌத்தமயமாக்கலை கண்டித்து வவுனியாவில் நேற்று போராட்டம்



வவுனியா, ஏப். 23

வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதியில், தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கலை கண்டித்து, வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

07

# இந்தியத் துணை ஜனாதிபதியின் சந்திப்பை தமிழ் தரப்பு சரியாகப் பயன்படுத்தவில்லை

## டக்ளஸ் தேவானந்தா குற்றச்சாடு

யாழ்ப்பாணம், ஏப். 23

இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணனுடனான சப்திப்பை தமிழ் தரப்பினர் சரியாகப் பயன்படுத்தவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களது சந்திப்பு தமக்கிடையே இருக்கும் குடுமிச் சண்டைக்கு தீர்வு கேட்டதாகவே அமைந்திருந்தது என்றும் சாடியுள்ளார்.

07

# சுரேஷ் சாலே தொடர்ந்தும் மறியலில்!

கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, சுரேஷ் சாலே உள்ளிட்ட சந்தேக நபர்கள் மீது நடத்தப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றங்களை மே மாதம் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் பிரிவுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் சுரேஷ் சாலேவை தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

07

# டித்வா இழப்பீட்டுத் தொகையை மே இறுதிக்குள் வழங்க பணிப்பு

கொழும்பு, ஏப். 23

டித்வா புயலால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்காக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை, மிக சிக்கலான சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய அனைத்துப் பயனாளிகளுக்கும் மே மாத இறுதிக்குள் வழங்கி

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### சர்ச்சைக்குரிய நிலக்கரி இறக்குமதி

# கணக்காய்வாளர் நாயகம் சமர்ப்பித்த அறிக்கையை முற்றாக ஏற்கமுடியாது!

## அமைச்சர் வசந்த சமரசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 23

சர்ச்சைக்குரிய நிலக்கரி இறக்குமதி தொடர்பாகத் கணக்காய்வாளர் நாயகம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் உள்ள சில விடயங்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.



தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், இந்த விவகாரத்தில் எவ்வித நிதி மோசடியும் இடம்பெறவில்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனத் தெரிவித்தார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் மோசடி நடந்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும், சில சாத்தியக்கூறுகள் குறித்த அவதானிப்புகள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொள்முதல் நடைமுறைகளில் விதிமீறல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுவதை நிராகரித்த அமைச்சர், கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் கொள்முதல் ஆணைக்குழு வெளியிட்ட கடிதத்தின்படி, இதில் அடிப்படைத் தவறுகள் ஏதும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தணிக்கை அறிக்கை முழுமையாகத் தவறு என்று தான் கூறவில்லை என்றாலும், அதில் உள்ள சில தரவுகள் மற்றும் கூற்றுகள் உண்மைக்குப் புறம்பானவை என அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# பாடசாலைகளை நம்பிக்கை தரும் இடங்களாக மாற்றுவதே நோக்கம்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஏப். 23

பாடசாலைகளுக்குள் சிறந்த உள-சமூகச் சூழலை உருவாக்குவதற்கு கல்வித் துறையின் அனைத்து அதிகாரிகளும் மிகுந்த பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும், பாடசாலையைப் பிள்ளைக்குப் பாசத்தையும் பாதுகாப்பையும் வழங்கும் நம்பிக்கைக்குரிய இடமாக மாற்றுவதே தமது நோக்கமாகும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டல் விவரக்கோவை மற்றும் வழிகாட்டல் கையேடு ஆகியவற்றை வெளியிடுதல், பாடசாலைகளுக்குள் "மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டல் நிலையங்களை" நிறுவுதல் ஆகிய தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

சமூகத்தை மாற்றியமைக்கத் தக்க ஒழுக்கமான பிரஜைகளை உருவாக்குவதே கல்வியின் பிரதான பணியாகும். அதற்குத் தகுந்த ஆரோக்கியமான, பாதுகாப்பான சூழலைப் பாடசாலைகளுக்குள் உருவாக்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்கிறோம். பாதுகாப்பானதொரு சூழலில் மாணவர்கள் தமது எதிர்காலக் கனவுகளை நோக்கிப் பயணிப்பதற்கான வழிகளைத் திறந்துவிடுவதே இந்த வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

# நுண் நிதி நிறுவனங்களில் அரச தரப்பினர் முதலீடா?

## நிஹால் அபேசிங்க விளக்கம்

கொழும்பு, ஏப். 23

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய அரசியல்வாதிகள் சிலர் நுண்நிதி நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகச் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திகள் குறித்து அந்தப் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நிஹால் அபேசிங்க விளக்கமளித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அமைச்சர்களான லால் காந்த மற்றும் வசந்த சமரசிங்க ஆகியோர் நுண்நிதி நிறுவனங்களில் பங்குகளைக் கொண்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கலாநிதி நிஹால் அபேசிங்க, தனிப்பட்ட நபர்களின் முதலீடுகள் குறித்துத் தனக்குத் தெரியாது என்ற போதிலும், ஒரு அரசியல் இயக்கம் என்ற ரீதியில் நுண்நிதித் துறையானது முறையாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனத் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டு நுண்நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த அமைச்சர் லால் காந்த, 2022 ஆம் ஆண்டு அத்தகைய நிறுவனமொன்றில் முதலீடு செய்துள்ளதாகக் கூறப்படும் விடயம் தார்மீகக் கேள்விகளை எழுப்பியுள்ளதாகச் சமூக ஊடகப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, நுண்நிதி நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக 2026 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை அதிகாரசபைச் சட்டம் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை உணவு விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவைத் திருத்தம் செய்ய முடியாது!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 23

உணவுப் பொருள்கள், எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளபோதிலும், பாடசாலை மதிய உணவு விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவு விகிதங்களை தற்போது திருத்தம் செய்ய முடியாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் நலக கலுவெவ, பாடசாலை உணவு விநியோகத்தர்களிடமிருந்து கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ கோரிக்கைகளும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய கொடுப்பனவுகள் தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய ஒரு வருட காலத்திற்காக கேள்வி கோரல் நடைமுறை மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அதனை அடிக்கடி மாற்ற முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

முட்டை, அரிசி மற்றும் மரக்கறிகளின் விலைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற் கொண்டே இந்த விலைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளில் தானியங்கிக் கட்டண அறவீடு

கொழும்பு, ஏப். 23

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகளில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் தானியங்கி கட்டண அறவீட்டு முறை அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சின் ஆலோசகர் சுமுது ரத்நாயக்க, இதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் அடுத்த சில வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தானியங்கி முறையானது நடைமுறைக்கு வரும் பட்சத்தில், நுழைவாயில்களில் வாகனங்கள் நீண்ட நேரம் வரிசையில் நிற்பது தவிர்க்கப்பட்டு, பொதுமக்கள் எவ்விதத் தாமதமுமின்றி விரைவாகப் பயணிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# மின்சாரக் கட்டண புதிய சூத்திரத்தை தயாரிக்கும் அதிகாரம் எமக்கே உண்டு!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 23

மின்சாரக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கான புதிய சூத்திரத்தைத் தயாரிக்கும் அதிகாரம் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கே உள்ளதாக அந்த ஆணைக்குழு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

எரிசக்தி மற்றும் நிதி அமைச்சுக்கள் இணைந்து புதிய கட்டண சூத்திரத்தை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்தே ஆணைக்குழு இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத், மின்சாரத் துறையில் நியாயமான செலவு மற்றும் இலாபத்தை உறுதிப்படுத்தும் வகையில் கட்டணங்களை நிர்ணயிக்கும் சட்டபூர்வமான பொறுப்பு ஆணைக்குழுவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். எரிசக்தி அமைச்சு என்பது மின்சார சபையின் உரிமையாளராக இருப்பதால், அந்த அமைச்சே ஒழுங்குபடுத்துநராகச் செயற்பட்டு கட்டண சூத்திரத்தை உருவாக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

வருடத்தில் எத்தனை முறை கட்டணங்களை திருத்தம் செய்வது என்பது போன்ற கொள்கை முடிவுகளை மாத்திரமே அமைச்சரவை எடுக்க முடியும் என்றும், அதற்கான தொழில்நுட்ப ரீதியான சூத்திரத்தை ஆணைக்குழுவே தயாரிக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பாராளுமன்ற சிரேஷ்ட அதிகாரிக்கு வழங்கிய இடமாற்றத்தை ரத்து செய்க!

## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு, ஏப். 23

பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு இடமாற்றத்தை உடனடியாக இரத்து செய்யுமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஸானி ரோஹணதீரவிற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணையில், குறித்த பெண் அதிகாரி ஒரு முக்கிய சாட்சியாக உள்ளமையே இந்த உத்தரவுக்குக் காரணமாகும்.

விசாரணை நிறைவடையும் வரை அந்த இடமாற்றத்தை ஒத்திவைக்குமாறு ஆணைக்குழு கோரியுள்ளது.

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைத்த சமிந்த குலரத்னவுக்கு எதிராகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவிருந்த இந்த இடமாற்றம், சாட்சியங்கள் மற்றும் விசாரணை நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்படுவதால் இந்தத் தலையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
23.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பெருவாரியான தமிழ்க் கட்சிகள் பற்றிய இராதாகிருஷ்ணனின் விசனம்

இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த போது அவர் தங்களிடம் கூறிய "கவனத்தை ஈர்க்கும்" வேண்டுகோள் ஒன்றைப் பற்றி தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"இராதாகிருஷ்ணன் எனது கைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கைகளையும் பிடித்துக் கொண்டு "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது அரசியல் கட்சிகள் அதிகரித்து விட்டன. இதனை ஓரளவுக்கு ஒழுங்கிற்கு கொண்டுவாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார். இதில் உள்ள ஆழமான கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்று வீட்டுக்கு வீடு, மாவட்டத்துக்கு மாவட்டம் பல கட்சிகள் உருவாகிவிட்டன. உண்மையில் எத்தனை கட்சிகள் இன்று இருக்கின்றன என்று தெரியவில்லை" என்று சிவஞானம் கூறினார்.

அந்த நேரத்தில் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் இவர்கள் இருவருக்கும் பக்கத்தில் நிற்கவில்லைப் போலும். நின்றிருந்தால் அவரின் கைகளையும் இந்திய துணை ஜனாதிபதி பிடித்திருப்பார். தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் அதிகரித்திருக்கும் கட்சிகளின் எண்ணிக்கை தொடர்பிலான விவகாரத்தில் சிவஞானம் அவர்களினால் எதைச் செய்ய முடியுமோ எமக்கு தெரியவில்லை. ஆனால், தனது கட்சிக்குள் நிலவும் பூசலைத் தீர்ப்பதற்கே வழிதெரியாமல் அவர் தவிக்கிறார் என்பது மாத்திரம் உண்மை.

தமிழரசு கட்சியின் உட்பிரச்னைகள் குறித்து பொது வெளியில் பேசுவதை தவிர்ப்பதற்கு புத்தாண்டில் இருந்து உறுதி பூணுவோம் என்று இவ்வாரம் சிவஞானம் கட்சி உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் ஐக்கியப்படுவது குறித்து பேசி எமது நேரத்தை வீணாக்க நாம் விரும்பவில்லை. "தமிழர் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு" என்று கூறப்படுவதுண்டு. பொதுவில் சமூகத்தின் நலன்களை முன்னிறுத்திச் சிந்திப்பதையும் செயற்படுவதையும் விடுத்து எடுத்ததற்கெல்லாம் முரண்படுவதுதான் அந்த "தனியான குணமோ" என்று நினைக்கத் தோன்றுவது உண்டு.

இலங்கைத் தமிழர் அரசியல் அதன் வரலாற்றில் முன்னென்றுமில்லாத இக்கட்டான கட்டத்தில் இருக்கிறது. அடுத்த மாதம் 18 ஆம் திகதியுடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து சரியாக 17 வருடங்கள் நிறைவடையவிருக்கிறது. போரின் முடிவுக்கு பின்னரான இதுவரையான காலப் பகுதியில் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை சமகால நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு பொருத்தமான முறையில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான அணுகுமுறையையோ, செயற்திட்டத்தையே தமிழ்க் கட்சிகளினால் வகுக்க முடியவில்லை.

குறைந்தபட்சம் அவர்களால் தமிழ் மக்கள் சார்பிலான கோரிக்கைகளை ஒரு குரலில் முன்வைக்கவும் முடியவில்லை.

போருக்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கை தமிழ் மக்களின் வலுவான ஒரு அரசியல் இயக்கமாக தமிழ் தேசிய கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்காமல் அதை சிதறவிட்டு இன்று கட்சிகள் தனித்தனியாக அல்லது சிறிய குழுக்களின் கூட்டு என்ற வடிவில் செயற்படுவதையே காண்கிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக செயற்படும் கட்சிகளுடன் மீண்டும் இணைந்து செயற்படுவதற்கு தமிழரசு கட்சி அண்மைக் காலத்தில் முனைப்புக் காட்டிவருகிறது. அது வரவேற்கத் தக்கது. மீண்டும் ஒரு வலுவான கூட்டமைப்பாக இயங்குவதற்கு வழிவகுக்கக்கூடிய பயனுறுதியுடைய முயற்சிகளை தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தீவிரப்படுத்த வேண்டும்.தொய்வு விடலாகாது.

தற்போது இயங்குகின்ற அல்லது தேர்தல்கள் வரும்போது இயங்கத் தொடங்குகிற பெருவாரியான கட்சிகளில் எந்தவொன்றையும் கலைத்துவிடுமாறு சிவஞானம் அவர்களினால் கேட்டமுடியாது. ஆனால், அவற்றில் உருப்படியான கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு கூட்டமைப்பாக இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை இலங்கைத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியின் தலைவர் என்ற தகுநிலையில் அவரால் நிச்சயமாக முன்னெடுக்க முடியும்.

பல கட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக இயங்குவதன் விளைவாக தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்தது தமிழரான இந்திய துணை ஜனாதிபதியின் வெளிப்படுத்திய கவலை நியாயமானது. நாம் யார் சொல்லைத்தான் கேட்டோம்?

## அமெரிக்கா - ஈரான் போர் நிறுத்தம் நீடிப்பு

வாஷிங்டன், ஏப். 23

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீடிக்கப்படுகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தியது.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்தம் நேற்றுப் புதன்கிழமையுடன் நிறைவடையவிருந்த சூழலில் ட்ரம்ப் இதனை நீடித்துள்ளார்.

இது தொடர்பில் ட்ரூத் சோஷியல் சமூக வலைத் தளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். "ஈரான் உடனான போர் நிறுத்தம் நீடிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்களை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டதை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வரவேற்றுள்ளார்.

இருப்பினும் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், பாகிஸ்தான் செல்லவிருந்த திட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக அமெரிக்க அரசு கூறியுள்ளது.

இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டது. அதை ஈரான் நிராகரித்து வருகிறது.

முன்னதாக, ஈரானுடனான போர் நிறுத்தத்தை நீடிக்க அமெரிக்கா விரும்பவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியிருந்தார். இது தொடர்பில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெளிவாக விளக்கமளித்தார். ஈரானோடு ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்றால் மீண்டும் தங்கள் தரப்பு தாக்குதலை தொடங்கும் என அவர் தெரிவித்திருந்தார். (எ)

## ஈரானுடன் போர் நிறுத்தத்தை அமெரிக்கா நீடித்ததையடுத்து தங்கம் விலை அதிகரிப்பு

வாஷிங்டன், ஏப். 23

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் நிறுத்தத்தை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலவரையின்றி நீடித்துள்ளதை தொடர்ந்து, சர்வதேச சந்தையில் தங்கம் விலை நேற்று புதன்கிழமை அதிகரித்துள்ளது.

போர் நிறுத்த நீடிப்பால் மசகு எண்ணெய் விநியோகத் தடை நீங்கும் என்ற நம்பிக்கையில் எண்ணெய் விலை குறைந்துள்ளது. இது பணவீக்க அச்சத்தை குறைத்துள்ளதால், முதலீட்டாளர்கள் மீண்டும் பாதுகாப்பான முதலீடான தங்கத்தை நோக்கித் திரும்பியுள்ளனர்.

அமெரிக்க டொலரின் மதிப்பு சற்று குறைந்ததும் தங்கம் விலை உயர ஒரு காரணமாக அமைந்தது.

தற்காலிக அமைதி நிலவினாலும், மேற்காசியாவின் நிச்சயமற்ற சூழல் தங்கத்தின் மீதான தேவையை தொடர்ந்து தக்கவைத்துள்ளது.

மேலும், தங்கம் விலை வரும் காலங்களில் மீண்டும் தனது வரலாற்று உச்சத்தை தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க மத்திய வங்கியின் தலைவராக பரிந்துரைக்கப்பட்டுள்ள கெவின் வார்ஷ், வட்டி விகிதங்களை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

வங்கியின் முடிவுகள் வெள்ளை மாளிகையின் தலையீடின்றி சுயமாக எடுக்கப்படும் என்றும் அவர் செனட் சபையில் உறுதியளித்துள்ளார். இது சந்தையில் ஒருவித நிலைத்தன்மையை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மியை பதவி விலகுமாறு ஜனாதிபதி அநுர உத்தரவு

கொழும்பு, ஏப். 23

இலங்கை கிரிக்கெட்டின் நீண்ட காலத் தலைவர் ஷம்மி சில்வாவை பதவி விலகுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஷம்மி சில்வாவுக்குப் பதிலாக, முன்னாள் றோயல் கல்லூரி கிரிக்கெட் வீரரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான எரான் விக்ரமரத்ன இடைக்காலக் குழுவில் நியமிக்கப்படுவார் என கூறப்படுகின்றது.

கிரிக்கெட் தலைவரின் இராஜினாமாவைக் கோரி வீரர்கள் உட்பட பல தரப்பிலிருந்தும் அதிகரித்து வரும் அழுத்தத்திற்கு இணங்க, ஒரு கடுமையான நடவடிக்கையாக, ஷம்மி சில்வாவை விரைவில் இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவருக்குத் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது. (அ)

## நான்கு கால்களுடன் அதிசய கோழிக் குஞ்சு



மட்டக்களப்பு, ஏப். 23

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீராவோடை எல்லை வீதியிலுள்ள வீடொன்றில் நான்கு கால்களுடன் அபூர்வ கோழிக் குஞ்சு பொரித்துள்ளது. வீட்டு உரிமையாளர் முகம்மட் நஸீர் என்பவர் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி 11 முட்டைகளை அடைகாக்க வைத் துள்ளார்.

அவ்வாறு அடைகாக்க வைத்த முட்டைகளில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 9 கோழிக் குஞ்சுகள் பொரித்தன.

அதில் ஒரு கோழிக் குஞ்சு நான்கு கால்களுடன் பொரித்துள்ளது. கறுப்பு மற்றும் மஞ்சள் நிறம் கலந்த நிலையில் ஆரோக்கியத்துடன் நான்கு கால்கள் கொண்ட அழகிய கோழிக் குஞ்சை பலரும் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 23 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 10
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சப்தமி




**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாகவாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில்சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியது வரும். நேர்மறை எண்ணங்கள் வரும் நாள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்றநிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம் பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# எரிபொருள், மின் விநியோகத்துக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாது

## அநுர கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

நிலக்கரி இறக்குமதி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் காணப்படுமாயின் பூரண அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் எதிர்க்கட்சியினர் முறைப்பாடளிக்க முடியும். எரிபொருள் மற்றும் மின் விநியோகத்துக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாது என்று வலுசக்தி, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் அமைச்சுக்கான கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மத்திய கிழக்கில் நிலவும் மோதலுக்கு மத்தியில் வலுசக்தி கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எரிபொருளுக்கான விலைமனு கோரல்கள் செய்யப்பட்டன.

பூகோள நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட வேண்டும். மின் விநியோகம் துண்டிக்கப்பட வேண்டும் என்றே எதிர்க்கட்சியினர் கருதுகிறார்கள். அதனால் தான் மக்கள் மத்தியில் அச்சநிலையையும், தவறான நிலைப்பாட்டையும் ஏற்படுத்துகிறார்கள்.

நிலக்கரி இறக்குமதி தொடர்பில் ஏதேனும் தகவல்கள் காணப்படுமாயின் பூரண அதிகாரமிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் எதிர்க்கட்சியினர் முறைப்பாடளிக்க முடியும். எரிபொருள் மற்றும் மின்விநியோகத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

நிலக்கரி குறித்து எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைக்கிறார்கள். ஆனால், ஆதாரத்துடன் உரிய தரப்பில் முறைப்பாடளிக்கவில்லை" -என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த வெப்பநிலை தொடரும்

கொழும்பு, ஏப். 23

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மொனராகலை மாவட்டங்களிலும் பகல் வேளையில் அதிகரித்த வெப்பநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மன்னார் தொடக்கம் கொழும்பு வரையான கடல் பிராந்தியங்களில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஏப். 23

மன்னார் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 2025-ஐ விட 2026 இல்

# பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடையக்கூடும்

கொழும்பு, ஏப். 23

2025 ஆம் ஆண்டில் இலங்கை எட்டிய பொருளாதார வளர்ச்சி வீதத்தை விடக் குறைவான ஒரு பெறுமதியே 2026 ஆம் ஆண்டில் பதிவாகக்கூடும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார ஆய்வு பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக விவசாய துறையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைத்தொழில் துறையில் உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளமை மற்றும் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக, ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளும் பலவீனமடையும் அபாயம் உள்ளது.

உலக பொருளாதாரச் சூழலும் இதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சர்வதேச நாணய நிதியம், உலகப் பொருளாதார வளர்ச்சி முன்னறிவிப்புகளை குறைத்துள்ளது.

உலகப் பொருளாதார வளர்ச்சி மந்தமடைவது இலங்கையின் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டின் ஏற்றுமதியையும் பாதிக்கும். எரிபொருள், உரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விநியோகச் சங்கிலி முறிவுகளும் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குண்டுத்தாக்குதல் நடத்தத்திட்டம் பரவும் செய்திகள் பொய்யானவை

## பொலிஸ் ஊடக பேச்சாளர்

கொழும்பு, ஏப். 23

கொழும்பு மற்றும் ஏனைய மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்த நபர் ஒருவர் தயாராகி வருவதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் சில இணையத்தளங்களில் வெளியாகி வரும் செய்திகளை பொலிஸார் மறுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப். யு. வூட்லர் கூறுகையில், இந்தத் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை. அத்துடன், இவ்வாறான எந்தவொரு சம்பவமும் பதிவாகவில்லை.

பாதாள உலகக் குழுத் தலைவர் கஞ்சிபானை இம்ரானின் சகா ஒருவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை ஜா-எல பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்ற செய்திகளும் பொய்யானவை என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ)

# விசா காலாவதியான நிலையில் 50 வெளிநாட்டவர்கள் சிக்கினர்

கொழும்பு, ஏப். 23

வர்த்தக விசா மூலம் நாட்டுக்கு வருகை தந்து, அவற்றின் காலாவதித் திகதி முடிந்த பின்னரும் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 50 வெளிநாட்டவர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களில் 47 சீனப் பிரஜைகளும், இரண்டு மலேசிய பிரஜைகளும், ஒரு இந்திய பிரஜையும் அடங்குகின்றனர்.

நீர்கொழும்பு பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இவர்கள் தங்கியிருந்த போது, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் தற்போது வெலிசர தடுப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை விரைவில் நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (எ)

ரணில் விக்கிரமசிங்க வழக்கு:

# 'ட்ரயல் அட்பார்' தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பில்லை

கொழும்பு, ஏப். 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கு விசாரணையை ட்ரயல் அட்பார் முறையில் விசாரணை மேற்கொள்வதாக பிரதம நீதியரசர் இதுவரை எந்த அறிவிப்பும் விடுக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் 3ஆம் தரப்பு யாராவது தெரிவிப்பதாக இருந்தால், அது பிரதம நீதியரசரின் அதிகாரத்தின் மீது தலையிடுவதாகும் என்பதுடன் சட்டத்தை மீறும் செயலாகும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# விபத்து: தப்பியோடிய ஓட்டோ சாரதி கைது

கொழும்பு, ஏப். 23

கல்கிஸ்ஸை பகுதியில் மோட்டார் சைக்கிளை மீது மோதிவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்ற 19 வயது ஓட்டோ சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

சமூக வலைத்தளங்களில் பரவிய காணொலி மற்றும் சி. சி. ரிவி காட்சிகளின் உதவியுடன், சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த விபத்து ஏப்ரல் 14 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளிய ஓட்டோ, விபத்துக்குப் பின் நிறுத்தாமல் தப்பிச் சென்றது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியிடம் வாக்குமூலம் பெறப்பட்டதை தொடர்ந்து பொலிஸாரால் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சமூக வலைத்தளங்களில் வைரலான காணொலி மற்றும் வீதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராக்களை ஆய்வு செய்ததன் மூலம், சந்தேக நபரையும் விபத்துடன் தொடர்புடைய ஓட்டோவையும் பொலிஸார் அடையாளம் கண்டனர். இதனையடுத்து,

இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞனை கைது செய்தனர். (எ)

# அரச வெசாக் உற்சவம்: இம்முறை மாத்தறையில்

கொழும்பு, ஏப். 23

அரச வெசாக் உற்சவம் மே மாதம் 27 ஆம் திகதி, மாத்தறை திஹகொடவிலுள்ள மிதெ வெல்லாவல புராதன விகாரை வளாகத்தில் நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானத்துக்கு இணங்க, மே 27 முதல் ஜூன் 2 வரை "வெசாக் வாரம்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து விகாரைகள், பாடசாலைகள், தஹம் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச மண்டலங்களின் முழுமையான வழிகாட்டலின் கீழ் தமது செயல்பாடுகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- இவ்வாறு பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

# பயங்கரவாத நிதி வழங்கலை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் பயங்கரவாதத்துக்கு நிதி வழங்குவதை தடுப்பதற்காக "இலக்கு வைக்கப்பட்ட நிதித் தடைகளை" அமுல்படுத்துவது தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தடைகளின் கீழ், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அல்லது அதற்கு நிதி உதவி வழங்குவதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் அல்லது அமைப்புகளின் வங்கிக் கணக்குகள், சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்து விவரங்களை முழுமையாக முடக்குவதற்கு முடியும். இதன்படி, அந்தச் சொத்துக்களை பயன்படுத்துதல், மாற்றுதல் அல்லது விற்பனை செய்தல் என்பன சட்டபூர்வமாக தடை செய்யப்படுகின்றன.

இந்த நடைமுறையானது, 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஒழுங்குவிதியின் மூலம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்துக்கு இணங்க செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் தடைகளை விதிக்கும் அதிகாரம் வெளிவிவகார அமைச்சரிடம் உள்ள அதே வேளை, அதன் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் "தகுதியுள்ள அதிகாரியாக" நியமிக்கப்பட்டுள்ளார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# “ஈஸ்டர் தாக்குதல்: கருத்து வேறுபாடுகளால் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும்”

கண்டி, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை சிங்கள பௌத்தர்கள் மீது சுமத்துவதற்கு முயற்சிக்கப்படுகிறது. குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இராணுவ புலனாய்வு பிரவு உள்ளது என்று அருட்தந்தை சிறில் காமினி குறிப்பிட்டுள்ள கருத்து சிங்கள - கத்தோலிக்க இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை தேடி செல்லல் எனும் புத்தகத்தை செவ்வாய்க்கிழமை கண்டி மல்வத்து பீட மகாநாயக்க தேரருக்கு கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்



கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றி நான் எழுதிய புத்தகத்தில் பிரதான சூத்திரதாரி யார் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பெயரிடப்பட்ட இப்ராஹிம் நிதி வழங்கிமை ஆதாரத்துடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு இருப்பதாக அருட்தந்தை சிறில் காமினி குறிப்பிட்டமை கவனத்துக்குரியது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தை சிங்கள பௌத்தர்கள் மீது சுமத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் நான் புத்தகம் எழுதி உண்மையை வெளிப்படுத்தினேன்.

எனது புத்தகம் மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஆகவே, இந்த விடயம் குறித்து ஆளும் தரப்புடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபடத் தயார்”- என்றார். (எ)

# எரிவாயு சிலிண்டர்களை பதுக்கிய வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை

கண்டி, ஏப். 23

கண்டியில் சமையல் எரிவாயு சிலிண்டர் இருப்புகளை பதுக்கி வைத்துவிட்டு, வாடிக்கையாளர்களிடம் எரிவாயு இல்லை என்று பொய்கூறிய வர்த்தக நிலையத்துக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தச் சம்பவம் கண்டறியப்பட்டுள்ளது.

எரிவாயுவை பதுக்கி வைப்பவர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்து பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சுற்றிவளைப்பின் ஒரு பகுதியாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (எ)

# விவசாயி சுட்டுக்கொலை! பரிசோதனையில் உறுதி

மட்டக்களப்பு, ஏப். 23

மட்டக்களப்பு- களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் மிளகாய் செய்கை தோட்டத்தில் காயங்களுடன் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட 68 வயது விவசாயி உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் சட்ட மருத்துவ அதிகாரியால் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி கடற்கரை வீதியிலுள்ள வீட்டுத் திட்டம் பகுதியிலுள்ள மிளகாய் செய்கை தோட்டம் ஒன்றில் விவசாயியான சிறிமுருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 68 வயது முதியவர் ஒருவர் தோட்டத்தில் வைத்து இனந் தெரியாதோரால் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டு மட்டு. போதனா மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து பிரேத பரிசோதனை மேற்கொண்ட போது உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியால் 3 முறை அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து கொலை செய்தமை தெரியவந்துள்ளது.

மேலும், இந்த துப்பாக்கி சூட்டை மேற்கொண்ட சந்தேகநபரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# சுகாதார அமைச்சின் முன்னாள் சட்ட அதிகாரி விளக்கமறியலில்

கொழும்பு, ஏப். 23

சுகாதார அமைச்சின் முன்னாள் தலைமை சட்ட அதிகாரி (ஓய்வு) ஒருவர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். இவர் சட்ட அதிகாரியாக பணியாற்றிய காலத்தில், சுகாதார அமைச்சுக்காக கட்டடம் ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுத்துள்ளார்.

குறித்த குத்தகை காலத்தை நீடிப்பதற்காக மூன்று குத்தகை ஒப்பந்தங்களை தயாரித்தமைக்காக, அதற்குரிய கட்டணம் எனக் கூறி 41 இலட்சத்து 34,887 ரூபாயை கோரியுள்ளார். அதில் 20 இலட்சம் ரூபாயை ஏற்கனவே பெற்றுக்கொண்ட அவர், எஞ்சிய தொகையையும் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எஞ்சிய தொகையிலிருந்து 5 இலட்சம் ரூபாயை, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயரில் மக்கள் வங்கியில் பேணப்படும் கணக்கிலிருந்து வழங்கப்பட்ட காசோலை ஒன்றின் ஊடாக பணமாக பெற்றுக்கொண்ட போது, இலஞ்சம் கோரியமை மற்றும் பெற்றுக்கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3. 45 மணியளவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து மே மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)

# பெண் மீது தாக்குதல்: 9 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப். 23

சமூக வலைத்தளங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய, பெண் ஒருவரை வீதியில் வைத்து மிலேச்சத்தனமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் 9 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


கடந்த 16 ஆம் திகதி கொகரெல்ல, மெதலந்த பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் காணொலியாக பதிவு செய்யப்பட்டு சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டதை தொடர்ந்து, இது குறித்து நாடு முழுவதும் அவதானம் திரும்பியது.

தாக்குதலை தொடர்ந்து சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்ற நிலையில், பொலிஸார் மேற்கொண்ட விரிவான விசாரணைகளின் பின்னர் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உறவினர்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த தகராறே இந்த மோதலுக்கு காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# மூன்று மாடி கட்டடம் முழுமையாக தீக்கிரை



கண்டி, ஏப். 23

கண்டி மெனிக்ஹின்ன நகரில் அமைந்துள்ள மூன்று மாடி வர்த்தக கட்டடம் ஒன்றில், நேற்று அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தால் அந்தக் கட்டடம் முழுமையாக தீக்கிரையானது.

மெனிக்ஹின்ன நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆடை விற்பனை நிலையம் ஒன்றிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

தீ மிக வேகமாக பரவியதன் காரணமாக கட்டடத்தில் இருந்த ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்கள் முழுமையாக எரிந்து சேதமடைந்தன. எனினும், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கண்டி மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் விரைவாக செயல்பட்டனர்.

தீயணைப்புப் படையினருடன் இணைந்து பிரதேச மக்களும் நீண்ட போராட்டத்தின் பின்னர் தீயை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. (எ)

# 216,000 போதை மாத்திரைகளுடன் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 23

மாதம்பை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலஹிட்டியாவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பெருமளவிலான போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மாதம்பை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

லொறி ஒன்றில் கடத்தி வரப்பட்ட 216,000 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

குறித்த போதை மாத்திரைகள் நுரைச்சோலையிலிருந்து கொழும்பு நோக்கி லொறியில் கடத்தப்பட்ட போதே சிக்கின.

கைது செய்யப்பட்டவர் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். (எ)

# தம்புள்ளையில் ஆரம்பமானது அமைதிக்கான நடைபயணம்



தம்புள்ளை, ஏப். 23

உலக அமைதிக்கான நடைபயணம் நேற்றுப் புதன்கிழமை காலை தம்புள்ளை விகாரை வளாகத்தில் ஆரம்பமானது.

இந்த நடைபயணத்துக்காக அமெரிக்காவில் இருந்து பஞ்ஞாகர தேரர் தலைமையிலான தேரர்கள் குழு செவ்வாய்க்கிழமை நாட்டை வந்தடைந்தது. இவர்களுடன் உலகம் முழுவதும் கவனம் பெற்ற ‘ஆலோகா’ என்ற நாயும் கலந்து கொண்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தேரர்கள் வருகை தந்த போது, அமைச்சர் ஹினிது சுனில் செனவி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நடைபயணம் தம்புள்ளையிலிருந்து ஆரம்பித்து, நாவுல, மாத்தளை, கண்டி, கடுகண்ணாவை, கேகாலை, யக்கலை, மகர மற்றும் களனி வழியாகச் சென்று, எதிர்வரும் 28ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தை அடையவுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தெற்கில் தமிழர்...

மேலும் தெரிவித்ததாவது: -

நெடுந்தீவில் 1,400 குடும்பங்கள் வாழ்கின்றன. சுற்றுலாத்துறை மற்றும் மீன்பிடித்துறைக்கு இங்கு நிறைய இடம் உள்ளது. எனவே, அப்பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டியது கட்டாயத் தேவையாகும்.

போக்குவரத்து பிரச்னைதான் இப்பகுதிக்கு பெரும் பிரச்னையாகும். இதனால் பாடசாலையைக்கூட உரிய நேரத்துக்கு ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. அப்பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள்கூட 3 மணிக்கு மூடப்படுகின்றன.

நெடுந்தீவு இலங்கைப் படத்தில் இருந்தாலும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் இங்கு கிடைக்கவில்லை. போக்குவரத்து பிரச்னையே நெடுந்தீவின் கழுத்தை நெரித்துள்ளது எனலாம்.

நெடுந்தீவுக்குள்ளும் பிரச்னைகள் உள்ளன. வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. வேறு குறைப்பாடுகள் இருப்பின் அவற்றை தீர்க்கலாம். எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பு அரசுகள் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தை கைவிட்டிருந்தன. ஆனால் எமது ஆட்சி அவ்வாறு இல்லை. யாழ்ப்பாணம் மற்றும் தீவக பகுதிகளுக்குரிய அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு, பருத்தித்துறை மற்றும் நைனாதீவு போன்ற பகுதிகளுக்கு யாழ்ப்பாண அரசாங்கம் (உள்ளூட்சி மன்றங்கள்) கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

கப்பல் போக்குவரத்து, இறங்குதுறைமுகம் பிரச்சினைகள் உரியவகையில் தீர்க்கப்படும். நெடுந்தீவுக்கு இரு இ.போ.ச. பஸ்கள் கோரப்பட்டிருந்தன. அதனையும் நாம் விரைவில் வழங்குவோம்.

அதேவேளை, எமது அரசாங்கத்திடம் இனவாதம் இல்லை. கொள்கை அடிப்படையிலேயே செயல்பட்டு வருகின்றோம். எனினும், வடக்கிலும், தெற்கிலும் உள்ள சில குழுக்கள் இனவாதம் பேசி அரசியல் நடத்துகின்றன.

தெற்கில் தமிழர் விரோத அசுர அரசொன்று இருக்க வேண்டும் என்பதையே வடக்கில் தோல்வி அடைந்துள்ள கட்சிகள் விரும்புகின்றன. நாம் அவ்வாறு செயல்பட மாட்டோம். எம்மிடம் இனவாதம் கிடையாது-என்றார். (அ)

## யாழில் அமைச்சரின்...

ஊடகவியலாள ர்கள் கலந்துரையாடல் ஆரம்பிக்க முன்னர் காணொளிகளை பதிவு செய்த நிலையில், கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் இருக்க முடியாது எனவும் கலந்துரையாடல் முடிந்த பின்னர் வருமாறும் மாவட்ட செயலக ஊடகப் பிரிவு உத்தியோகத்தரால் அறிவுறுத்தப்பட்டது.

கலந்துரையாடல் தொடர்பாக அழைப்பு விடுக்கப்பட்டே ஊடகவியலாளர்கள் பங்கேற்றமை தொடர்பாக குறித்த உத்தியோகத்தருக்கு தெளிவுபடுத்தப்பட்டபோதும் ஏனைய நிகழ்வுகளுக்கே அழைப்பு விடுக்கப்பட்டது எனவும் இதில் இருக்க முடியாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் ஊடகவியலாளர்கள் கலந்துரையாடல் அறையில் இருந்து வெளியேறினர்.

மாற்றம், வெளிப்படைத்தன்மை தொடர்பாக அதிகம் வலியுறுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் பங்கேற்ற கூட்டத்தில் ஊடகவியலாளர் இருக்கவே முடியாது எனத் தெரிவிக்கப்பட்டமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. (அ)

## தமிழகத் தேர்தல்...

எடப்பாடி பழனிசாமி (அ.தி.மு.க), மயிலாப்பூரில் தொடங்கி, சொந்த ஊரான சேலத்தில் பிரசாரத்தை முடித்தார்.

விஜய் (த.வெ.க), பெரம்பூரில் தொடங்கி, சென்னை நந்தனத்தில் பிரம்மாண்ட கூட்டத்துடன் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

சீமான் (நா.த.க), காரைக்குடியில் தனது இறுதிக்கட்டப் பேச்சை நிகழ்த்தினார்.

அன்புமணி ராமதாஸ் (தர்மபுரி), டி.டி.வி.தினகரன் (காரைக்குடி), பிரேமலதா (விருத்தாசலம்), திருமாவளவன் (திருக்கோவிலூர்) ஆகியோரும் தத்தமது இலக்குகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். (அ)

## யாழ்ப்பாணம்

நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று பி. ப 03.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபனால் வரவேற்புரையாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாண நகரை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பங்குதாரர்களுடன் ஆலோசனை களையும், கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளரும் யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினருமான எஸ். கபிலன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாணப் பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர்கள், துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், பிரதிநிதிகள் என உள்ளிட்ட தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ)

## உரும்பிராய் விபத்தில்...

வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தனர். இதன்போது உரும்பிராய் சந்தியில் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது பட்டா ரக வாகனம் மோதியுள்ளது. இந்நிலையில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பின்னர் அவர்களது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஏழாலை கிழக்கு, ஏழாலையை சேர்ந்த சிறீனிவாசன் பரமேஸ்வரன் (வயது 64), பரமேஸ்வரன் கஜதீபன் (வயது 23) ஆகியோரே இதன்போது உயிரிழந்துள்ளனர்.

அவர்களது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

குறித்த இளைஞரின் தாயாரும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-05)

## இந்தியத் துணை...

இந்திய துணை ஜனாதிபதியின் இலங்கை வருகையும் தமிழ் அரசியல் தரப்பினரது சந்திப்பும் தொடர்பில் கருத்துக் கூறுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவின் உதவி ஜனாதிபதி இலங்கை வந்திருந்தபோது அவரை சந்திக்க கிடைத்த சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் தரப்பினர் தமக்கிடையே இருக்கும் குடுமிச் சண்டையை எடுத்துக் கூறி தீர்வு கேட்டதாக இருந்ததே தவிர தமிழ் மக்களுக்கான தேவைகளையோ அபிலாஷைகளையோ கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கான ஒன்றாக அமையாதது எனக்கும் எமது மக்களுக்கும் வேதனையையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது

இன்றைய காலச்சூழலில் இந்தியாவின் துணை ஜனாதிபதி இலங்கை வருகை தந்ததானது வரவேற்கத்தக்க ஒரு செய்தி.

அதேநேரம் அவரது வருகையையும் சந்திப்பையும் தமிழ் அரசியல் தரபினர் சரியாக பயன்படுத்தவில்லை என்பதுதான் என்னுடைய கவலையாக இருக்கின்றது.

ஏனென்றால் கடந்த காலத்தில் இவ்வாறு எனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களையும், நாமாகவே சந்தர்ப்பங்களை உருவாக்கியும் எமது மக்கள் தேவைகள் குறித்து நாம் சரியாக கையாண்டிருக்கின்றோம்.

குறிப்பாக நான் 2010 இல் இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷ உள்ளிட்ட உயர்மட்டக் குழுவுடன் இந்தியா சென்றிருந்தபோது 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் 500 உழவு இயந்திரம், யாழ். கலாசார மத்திய நிலையம் உள்ளிட்ட அவசிய தேவைகளை பெற்றிருந்ததுடன் 13ஆவது திருத்தச் சட்டமே தீர்வுக்கான ஆரம்பம், ஆனால் அது ஒரு நிரந்தர தீர்வல்ல என்றும் சுட்டிக் காட்டி வலியுறுத்தியிருந்தேன்.

அவ்வாறாக நாம் முன்னெடுத்த சந்திப்புக்கள் எமது மக்களுக்கு பல வகைகளிலும் நன்மையாகவே அமைந்திருக்கின்றது.

ஆனால் தற்போது இவர்களது இந்த சந்திப்பு என்பது தமக்குள் இருக்கும் குடுமிப்பிடி சண்டையை அவரிடம் சென்று சொல்லி தீர்வுக்காக கலந்துரையாடியது போலவும் அதேநேரத்தில் எமது மக்களுக்கிருக்கின்ற பிரச்னைகள் தொடர்பில் அழுத்தமாக கோரிக்கைகளையோ தேவைகளையோ கோரவில்லை என்பதும் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தளவில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகவே ஒரு தீர்வை பெற்றுத்தர முயற்சிப்பார்கள். அதற்கும் மேல் அவர்கள் போகமாட்டார்கள். அதனடிப்படையில் அதையாவது இவர்கள் பெற்றுத்தருமாறு எடுத்துரைத்து கேட்டிருக்கலாம்.

ஆனால் இவர்கள் வழமைபோன்று தமது சுயலாப அரசியலில் இருந்துகொண்டுதான் இந்தச் சந்திப்பையும் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

இவர்களது இந்த செயற்பாடானது மக்களை கடுமையாக வேதனையடைய வைத்துள்ளதுடன் குறிப்பாக இவர்கள் எமது பிரச்னைகளுக்கு தீர்வை பெறும் நோக்கில் இந்திய துணை ஜனாதிபதியை சந்தித்திருக்கின்றார்கள் என்றும் சலித்துக்கொள்ள வைத்துள்ளது.-என்றார். (அ)

## வீதி அபிவிருத்தி...

க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், சிறீபாவானந்தராஜா ஆகியோருடன், அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ)

## பிரேம்லால்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே, நீதவான் புஷ்பிகா ஜயதாச இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அதன்படி, 25,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில், கடுமையான நிபந்தனைகளுடன் அவரை விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், இந்த வழக்கினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கவும், தொடர்புடைய துப்பாக்கியை வழக்கு சான்றுப் பொருளாக நீதிமன்றப் பொறுப்பில் வைக்கவும் உத்தரவிடப்பட்டது.

சந்தேகநபரின் வெளிநாட்டுப் கடவுச்சீட்டு நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

## பௌத்தமயமாக்கலை...

வவுனியா தபாலகத்திற்கு அருகாமையில், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும், வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவி னர்களின் சங்கத்தினர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பில், நீண்டகாலமாக எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில், அவர்களின் உறவினர்கள் காத்திருப்பதாக, பெற்றோர்கள் கவலை வெளியிட்டனர். (அ)

## டித்வா...

முடிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை விடுத்தார்.

டித்வா புயலினால் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்த வீடுகளில் வசித்தவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் புதிய வீடுகளை கையளிக்கும் பணிகள் தொடர்பாக நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுலகத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

முழுமையாக சேதமடைந்த வீடுகளில் வசித்தவர்களுக்குப் புதிய வீடொன்றை வழங்குவது அல்லது வீடொன்றை கொள்வனவு செய்வதற்காக 50 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்த இழப்பீட்டுத் தொகையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இன்னமும் முகாம்களில் வசித்து வரும் மக்களுக்கு, புதிய வீடுகள் கிடைக்கும் வரை அவர்களைத் தற்காலிக வீடுகளில் குடியமர்த்துவது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்கேற்ற பொருத்தமான இடங்களைக் கண்டறிந்து, அந்தப் பணிகளை மிக விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மிக ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், புதிய வீடு வாங்குவதற்கு இழப்பீடு பெறாதவர்களுக்காக வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## சுரேஷ் சாலே...

தடுத்து வைக்கப்பட்டுள்ள, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நேற்று, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நேற்று முன் தினம் 07 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் தாக்குதல்களின் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் பிள்ளையான் ஆகியோரிடம் தொடர்ச்சியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், சுரேஷ் சாலே நேற்று குற்றப் புலனாய்வுத் துறையினரால் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். சனல்-4 இற்கு அசாத் மௌலானா கொடுத்த அறிக்கையின்படி, தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் சுரேஷ் சாலே நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மருந்துப் பற்றாக்குறை ஏற்படும் அபாய நிலை!

## மருந்துத் தொழில்துறை சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் மருந்து விநியோகச் சங்கிலியில் அதிகரித்து வரும் அழுத்தம் காரணமாக, அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் மருந்துகளைத் தடையின்றி அணுகுவதை உறுதி செய்யும் நாட்டின் திறன் பாதிக்கப்படக்கூடும் என இலங்கை மருந்துத் தொழில்துறை சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இந்த மருந்துப் பற்றாக்குறை நெருக்கடியைத் தடுப்பதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

உடனடி மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், தனியார் மற்றும் பொது சுகாதாரத் துறைகளில் அதிகரித்து வரும் தட்டுப்பாட்டை இலங்கை எதிர்கொள்ளக்கூடும் என்றும், இது நோயாளிகள், மருத்துவமனைகள் மற்றும் முழு சுகாதாரக் கட்டமைப்பையும் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, எரிபொருள் விலைகள் சுமார் 38 வீதத்தாலும், சரக்குக் கட்டணங்கள் 40 வீதத்துக்கும் அதிகமாகவும் உயர்ந்துள்ளன.

அத்துடன், மருந்து மூலப் பொருள்களின் உலகளாவிய விலைகள் சில சந்தர்ப்பங்களில் 70 வீதம் வரை அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை இறக்குமதி செலவை கணிசமாக உயர்த்தியுள்ளது.

தற்போதைய இறக்குமதி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் மற்றும் விலை மீளாய்வு செயன்முறையில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் இந்த அழுத்தங்களை மேலும் அதிகரிப்பதாக இலங்கை மருந்துத் தொழில்துறை சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை மிகவிரைவில் நிறைவு செய்வோம்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை இன்னும் குறுகிய காலத்திற்குள் வெற்றிகரமாக நிறைவு செய்ய முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்த விசாரணைகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த விசாரணைகளைச் சரியான முறையில் முன்னெடுப்பதற்காக பொலிஸாரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

விசாரணைகள் தொடர்பான விவரங்கள் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும், மிகக் குறுகிய காலத்தில் இவற்றை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வர முடியும் எனத் தான் நம்புவதாகவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# இலங்கையின் மறுசீரமைப்பு; பிலிப்பைன்ஸ் அரசு நிதியுதவி

கொழும்பு, ஏப். 23

டித்வா சூறாவளியினால் இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொடர்ந்து, மறுசீரமைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் 100,000 அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இந்த நிதியுதவியை இலங்கையிலுள்ள பிலிப்பைன்ஸ் தூதுவர் நினா பி. கெய்ங்லெட், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், கடினமான இந்த மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் தருணத்தில், பிலிப்பைன்ஸ் அரசாங்கமும் அந்நாட்டு மக்களும் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கும், காட்டிய ஒற்றுமைக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

### டித்வா புயல் காரணமாக

# உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடுகள் கிடைக்கவில்லை

மன்னார், ஏப். 23

நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகள் தமக்கு உரிய முறையில் கிடைக்கவில்லை என மன்னார் - மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தம்பனைக்குளம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறித்த கிராமத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்னைகளை பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

அரசாங்கத்தினால் 25 ஆயிரம் ரூபாய் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை வீடு துப்பரவு செய்தல் உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாவும், கால்நடை இழப்பீடு வழங்கப்படவில்லை எனவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கால்நடைகள் அழிவு குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றபோதும் உரிய ஆவணங்கள் இல்லை என்ற காரணத்தைக் கூறி கால்நடை அழிவுக்கான கொடுப்பனவை பெற்றுத் தர அவர்கள் மறுத்து விட்டனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# தீவக மக்கள் நல்ல மாற்றங்களை மிகவிரைவில் அனுபவிப்பார்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 23

தீவகப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் இதுவரை எந்தவொரு அரசாங்கமும் காட்டாத அக்கறையையும் கரிசனையையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமே காண்பிக்கின்றது.

இந்தத் தீவகப் பகுதி மக்கள் எதிர்பார்த்திராத பல மிகப் பெரிய அபிவிருத்திகள் இனி நடக்கும். அந்த நல்ல மாற்றங்களை இங்குள்ள மக்கள் விரைவில் அனுபவிப்பார்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, 984 மில்லியன் ரூபா மக்களின் வரிப்பணத்தில் முன்னெடுக்கப்படும் குறிகாட்டுவான் இறங்குதுறைப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் விசேட பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்திலுள்ள கடல் கடந்த தீவுகளுக்குரிய பிரதான போக்குவரத்து மார்க்கமாகவுள்ள குறிகாட்டுவான் இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இது எமது மக்களின் நீண்டநாள் கனவு நிறைவேறும் நன்னாளாக அமைகின்றது. குறிப்பாக, நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் இந்த இறங்குதுறையில் தமது படகுகளை நிறுத்தி வைப்பதில் பெரும் இடர்களை எதிர்கொண்டிருந்த நிலையில், அதற்கான நிரந்தரத் தீர்வும் தற்போது எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், தீவகப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது.

இப்பகுதிகளின் வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கும் அதீத முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது இந்த இறங்குதுறை புனரமைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் நெடுந்தீவு இறங்குதுறையையும் புனரமைப்பதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டம் தீவக மக்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த வரப்பிரசாதமாகும்.

இந்த அரசாங்கத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் துரித கதியில் அபிவிருத்திகள் நடைபெறுவது சிலருக்குப் பிடிப்பதில்லை. எப்படியாவது தேவையற்ற கருத்துகளைக் கூறி குழப்பங்களை ஏற்படுத்தவே அவர்கள் முயற்சிக்கின்றனர்.

உண்மையில், அபிவிருத்தித் திட்டங்களின் தாமதத்துக்கு அரசாங்கம் காரணமல்ல. ஒரு சில அரச திணைக்களங்கள்தான் அதற்குக் காரணமாகின்றன. அவர்கள் தங்களைத் திருத்திக்கொண்டு, அரசாங்கத்தின் வேகத்துக்கு ஈடுகொடுத்துச் செயற்பட முன்வரவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ச.சிறீபவானந்தராஜா, ஜெ.றஜீவன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதி, யாழ். மாவட்ட செயலாளர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர்கள், நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# தொலைபேசிப் பயன்பாடு இலங்கையில் அதிகரிப்பு!

## 100 பேருக்கு 147 கையடக்கத் தொலைபேசிகள்

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாடு கணிசமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருளாதார மீளாய்வு அறிக்கையின்படி, இலங்கையில் ஒவ்வொரு 100 பேருக்கும் சுமார் 147 கையடக்கத் தொலைபேசிகள் பயன்பாட்டில் உள்ளமை தெரியவந்துள்ளது.

அதேபோன்று, ஒவ்வொரு 100 பேருக்குமான நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கை 12.1 ஆகக் காணப்படுகிறது.

கடந்த 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

நாட்டில் டிஜிற்றல் மயமாக் கல் மற்றும் தொடர்பாடல் வசதிகள் விரிவடைந்து வருவதையே இந்தத் தரவுகள் சுட்டிக்காட்டுவதாகப் பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org